O

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# தமிழ் B

தாள் 3

**1152/3**

# ORAL EXAMINATION

**TAMIL B**

Paper 3

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

குறிப்புகள்

1. வாய்மொழித் தேர்வு பின்வரும் இரு பகுதிகளை உள்ளடக்கியது:

   - **பகுதி 1 – வாய்விட்டு வாசித்தல்**
     நீ ஒரு பனுவலை வாய்விட்டு வாசிக்க வேண்டும்.

   - **பகுதி 2 – ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**
     நீ ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்க வேண்டும். அதன் பின்னர், தேர்வாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும்.

2. நீ **'START'** என்பதை 'கிளிக்' செய்ததும், பனுவலை மனத்திற்குள் படித்துக்கொள்வதற்கும் ஒளிக்காட்சியைப் பார்த்துக்கொள்வதற்கும் உனக்கு 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

**INSTRUCTIONS**

1. This Oral Examination has two parts:

   - **Part 1 – Reading Aloud**
     You will read aloud a passage.

   - **Part 2 – Conversation**
     You will watch a video clip. Thereafter, you will engage in a conversation with the oral examiners.

2. When you click on '**START**', you will have 10 minutes to study the text and watch the video clip.

Singapore Examinations and Assessment Board

©MOE

# 2024 சிங்கப்பூர் - கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தமிழ் B தேர்வு (1152/3)

---

## பகுதி 1 - வாய்விட்டு வாசித்தல்

“முடியாது என்ற வார்த்தையே எனது அகராதியில் கிடையாது,” என்று கூறியவர் பிரஞ்சு நாட்டின் மன்னராகத் திகழ்ந்த நெப்போலியன். அவர் தம் இளம்வயதில் போர்வீரராக இருந்தபோது மற்றப் படைவீரர்களுடன் ஓர் ஊரில் முகாமிட்டுத் தங்கியிருந்தார். ஒருநாள் படைவீரர்கள் பேசிக்கொண்டு நேரத்தை வீணே கழித்துக்கொண்டிருந்தனர். ஆனால், நெப்போலியன் மட்டும் கூடாரத்தினுள் நூல் வாசித்துக்கொண்டிருந்தார். படைவீரர்கள் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்க, நெப்போலியன் மட்டும் தனியே அமர்ந்து படித்துக்கொண்டிருப்பதைப் பெண்மணி ஒருவர் கிண்டல் செய்தார். ஆனால், நெப்போலியன் அதைப் பொருட்படுத்தவில்லை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நெப்போலியன் பிரஞ்சு மன்னராகி அதே ஊருக்கு வந்தபோது அப்பெண்மணியைச் சந்தித்தார். அவர் அப்பெண்மணியிடம் தம்மைக் கிண்டல் செய்ததை நினைவுபடுத்தி, “நானும் மற்றப் படைவீரர்களைப்போல் பொழுதைக் கழித்திருந்தால் இன்றுவரை போர்வீரராகத்தான் இருந்திருப்பேன்,” என்று கூறினார். நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்ததால் நெப்போலியன் பிரஞ்சு நாட்டின் மன்னர் ஆனார்.

# 2024 சிங்கப்பூர் - கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தமிழ் B தேர்வு (1152/3)

பகுதி 2 - ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**தூண்டுதல் வினாக்கள்:**

1. ஒளிக்காட்சியில் பார்த்தது போன்ற வகுப்பறையில் இருந்த அனுபவம் உனக்கு உண்டா? விளக்கிக் கூறு.

2. மாணவர்கள் வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருக்க உன் பள்ளி எவ்வாறு ஊக்குவிக்கிறது?

3. பள்ளியைச் சுத்தமாக வைத்திருக்கப் பள்ளிப் பணியாளர்கள் தேவை என்று நீ நினைக்கிறாயா?

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.